
# திராவிடத்தால் வாழ்கிறோம்

813

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

# உடன்பிறப்பே...

**நீரை.மகேந்திரன்**

106

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன் பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த க.சுந்தரம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**




ஓவியம் : ரவி பேலட்

1989-ஆம் ஆண்டு, நீண்ட இடைவெளிக்குப் பின் கழக ஆட்சி அமைந்தபோது, மீஞ்சூர் சட்டமன்றத் தொகுதியில் இருந்து வெற்றிபெற்று வந்த 41 வயது இளைஞரை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக, தனது அமைச்சரவை சகாவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். இளந்துடிப்பான ஒரு புதுமுகத்தை அமைச்சர் இருக்கையில் அமர வைத்து, அவருடன் கலைஞர் எடுத்துக் கொண்ட ஒரு புகைப்படம் காலத்தின் மகத்தான சான்று. கழகத் தலைவர் கலைஞர் தன் இதயத்தில் இருத்திக் கொண்ட அந்த உடன்பிறப்பு க.சுந்தரம்.

அன்றைக்கு மீஞ்சூர் ஒன்றியக் கழகத்தின் செயலாளர், பின்னாட்களில் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் எனப் படிப்படியாக உயர்ந்து வந்த உடன்பிறப்பு. "அமைதியாகப் பணியாற்றுபவர்களுக்கு எடுத்துக்காட்டு வேண்டும் என்றால், அது க.சுந்தரம் அவர்கள் தான்" என இன்றைய கழகத் தலைவர் பெருமையுடன் சான்றளித்த கழகத் தொண்டர்.

அன்றைய ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டம், இன்றைய திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூரில் 1948-ஆம் ஆண்டு பிறந்தவர் சுந்தரம். பெற்றோர் கன்னி - கோவிந்தம்மாள். மீஞ்சூரில் பள்ளிப்படிப்பு முடித்தவர், தொடக்கக் காலத்தில் தனியார் தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார். 1965 காலகட்ட தமிழ்நாட்டின் அரசியல் களம், இளைஞர்கள் பலரையும் கழகத்துக்குள் கொண்டு வந்தது. அப்போது கழகத்தின் போராட்டங்கள், பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் செயல்வீச்சுகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்த இளைஞர்களில் சுந்தரமும் ஒருவர்.

தொடக்கக் காலங்களில் மீஞ்சூர் கிளைக்கழகச் செயலாளர், ஒன்றியப் பிரதிநிதி, மீஞ்சூர் ஒன்றியச் செயலாளர், தலைமைப் பொதுக்குழு, தலைமைச் செயற்குழு என படிப்படியாகக் கழகத்தின் பல பொறுப்புகளில் பணியாற்றிய சுந்தரம் அவர்கள், கழகத் துணைப் பொதுச் செயலாளராகவும் சிறப்புடன் பணியாற்றியவர். 2022-ஆம் ஆண்டில் கழகத்தின் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்ட போது, கழகத்தின் ஆதிதிராவிட நலக்குழுத் தலைவராக இன்றைய தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

## வெற்றிகளும் அமைச்சரவையும்

துடிப்புமிக்க இளைஞராக களப்பணியாற்றி வந்த சுந்தரத்துக்கு 1984-ஆம் ஆண்டில், அவரது 36 வயதில் தேர்தல்களம் காணும் வாய்ப்பினை அளித்தார் கலைஞர். அப்போதைய அரசியல் சுழலில், வெற்றி வாய்ப்பைப் பெற முடியவில்லை என்றாலும், களப்பணியை மட்டும் கைவிடவில்லை. அந்த உறுதிக்காக, மீண்டும் 1989-ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் வாய்ப்பு வழங்கினார் கலைஞர். அந்த ஆண்டு வெற்றியுடன் வந்த சுந்தரத்தை அமைச்சரவையில் இணைத்து, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும் ஆக்கி அழகு செய்தார் கலைஞர்.

1991-ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த அவர், 1996-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது அவர் முன்பு வென்ற பொன்னேரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அப்போதும், கலைஞர் தனது அமைச்சரவையில் பால்வளத் துறை அமைச்சராக்கினார். இரண்டு முறை அமைச்சராக இருந்தபோதும் கலைஞரிடம் நம்பிக்கையைப் பெற்று, திறம்படப் பணியாற்றியவர். 2001-ஆம் ஆண்டில் மீண்டும் பொன்னேரி தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பை வழங்கினார் கலைஞர்.

பொன்னேரி பகுதிக் கழகத்தின் முகம் சுந்தரம்தான் என்கிற அளவுக்கு, பொன்னேரி, மீஞ்சூர், சோழவரம், அத்திப்பட்டுப் பகுதிகளில் சுற்றிச் சுழன்று பணியாற்றியவர். அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்பதால் தான் தொடர்ந்து தேர்தல் களங்களில் வாய்ப்பு அளித்தார் கலைஞர்.

## செயல்வீரர்

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்திலும், பங்கேற்ற தீரமிகு செயல்வீரர். தலைவர் கலைஞர் மீதும், கழகத் தலைவர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர் சுந்தரம். நெருக்கடி காலத்துக் கட்சிப் பணிகள், பால் கமிஷன் அறிக்கை தொடர்பாக, கழகம் நடத்திய தீவிரப் போராட்டங்கள், இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டங்கள் என அனைத்துக் களங்களிலும் மீஞ்சூர் பகுதிக் கழகத்தை முன்னணியில் நின்று வழிநடத்தியவர் சுந்தரம்.

2005-ஆம் ஆண்டு, அன்றைய அ.தி.மு.க. ஆட்சி அவரை மிரட்ட வேண்டும் என சதிவழக்கு போட்டது. ஆனால் அது, ஆதாரங்கள் இல்லாத பொய் வழக்கு என மீண்டும் அ.தி.மு.க. ஆண்ட 2015-ஆம் ஆண்டில் நீதிமன்றமே தள்ளுபடி செய்தது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், வளர்க்கப்பட்ட இந்த உடன்பிறப்பு, வழக்கு வெற்றியுடன் கலைஞரைச் சந்தித்து, வாழ்த்துகளைப் பெற்றது வரலாற்றுக் குறிப்பு.

> **"உங்கள் தொண்டு அளவிட முடியாதது. இத்தோடு உங்கள் பொறுப்பும், கடமையும் முடிந்துவிடவில்லை. எங்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டுங்கள். இன்றைய இளைஞர்களை வழிநடத்துங்கள்."**

2022-ஆம் ஆண்டில், சுந்தரம் அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டபோது, மீஞ்சூரில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று உடல்நிலை விசாரித்தார் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள். உடல் நலிவுற்றாலும் கழகம் துணை நிற்கும் என்பதைச் சொல்லாமல் சொன்னது தலைவரின் அந்தப் பயணம். தவிர, சுந்தரம் அவர்களின் உழைப்புக்குப் பெருமை சேர்க்கும் வகையில், 2023-ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற கழகத்தின் முப்பெரும் விழாவில் 'பேரறிஞர் அண்ணா' விருதை வழங்கியும் சிறப்பு செய்தார் தலைவர்.

அந்த விருதினை வாங்க, கைத்தாங்கலாக வந்தார் சுந்தரம். அப்போது, கழகமே உயிர்மூச்சு என அவர் நெகிழ்ந்த நிகழ்வினைப் பசுமை மாறாமல் பகிர்கின்றனர் கழகத்தினர்.

அந்த விழா உரையில், சுந்தரம் அவர்களின் கழகப் பணி குறித்து பகிர்ந்த தலைவர், "எந்தப் பொறுப்பை வகித்தாலும், அதில் அமைதியாகவும் - ஆக்கப்பூர்வமாகவும் செயல்படக் கூடியவர் சுந்தரம்" எனப் பெருமைப்படுத்தினார்.

## வழிகாட்டிகள்

"பேரறிஞர் அண்ணா விருது பெற்றுள்ள சுந்தரம் உள்ளிட்ட அனைவரையும் தலைமைக் கழகத்தின் சார்பில், மட்டுமில்லை, தனிப்பட்ட முறையிலும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், போற்றுகிறேன். உங்களது ரத்தத்தால், வியர்வையால், தியாகத்தால், தொண்டால் வளர்ந்த இயக்கம் இது. உங்களுக்கு விருதுகள் தருவது மூலமாக நாங்கள் எங்கள் நன்றியைக் காட்டுகிறோமே தவிர, உங்கள் தொண்டுக்குப் பரிசு வழங்குகிறோம் என்று பொருள் இல்லை. உங்கள் உழைப்பு விலைமதிக்க முடியாதது. உங்கள் தொண்டு அளவிட முடியாதது. இத்தோடு உங்கள் பொறுப்பும், கடமையும் முடிந்துவிடவில்லை. எங்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டுங்கள். இன்றைய இளைஞர்களை வழிநடத்துங்கள்" என உணர்வு பொங்க உரையாற்றினார் தலைவர்.

ஆனால், தலைவர் கேட்டுக் கொண்டதற்கு மாறாக, சுந்தரம் அவர்களால் முன்புபோல தீவிரமாக இயங்க முடியவில்லை. அவர் உடல்நலம் ஒத்துழைக்கவில்லை. ஆனாலும், தனது இறுதிக்காலம் வரை இளைஞர்களை அரவணைத்து, கழகப் பணிகளில் ஊக்கப்படுத்திக்கொண்டே இருந்தார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அவர், தனது 76-வது வயதில் மறைந்தபோது, கழகத் தலைவர் நேரில் சென்று மரியாதை செய்தார். ஒட்டுமொத்த அமைச்சரவையே நேரில் சென்று, இறுதியாக விடையளித்து வந்தது. கழகத் தீரர்களின் ரத்தத்தால், வியர்வையால், தியாகத்தால், தொண்டால் வளர்ந்த இயக்கம், அன்று கண்ணீரால் நிறைந்தது.

**...துடிக்கும்**

## மாணவர்கள் புகட்டிய பாடம்!

பாடப்புத்தகங்களில் அறிவியலை நீக்கிவிட்டு, புராணங்கள்–இதிகாசங்களில் எழுதப்பட்ட கதைகளை அறிவியலாக மாற்றும் முயற்சிகள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் முழுவீச்சாக நடந்து கொண்டிருக்கிறது. புராண காலத்திலேயே, 'பிளாஸ்டிக் சர்ஜரி' இருந்தது என, பிரதமர் மோடி அறிவியல் மாநாட்டுக்குச் சென்று கூறினார். அதேபோல மாட்டின் சாணமும், சிறுநீரும் உடல்நலத்திற்கு நல்லவை, நோய்களைத் தீர்க்கும் வல்லமை கொண்டவை போன்ற அறிவியலுக்குப் புறம்பான கருத்துகளையும் சங்கிகள் பரப்பி வருகின்றனர்.

கோமியத்தில் 'பூஞ்சை எதிர்ப்பு', 'பாக்டீரியா எதிர்ப்பு', 'அழற்சி எதிர்ப்புப் பண்புகள்' இருப்பது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது என ஐ.ஐ.டி. இயக்குநரே பேசி, சர்ச்சையைக் கிளப்பினார். ஆனால், மருத்துவ அறிஞர்கள் அந்தக் கருத்தை முற்றிலும் நிராகரித்தனர். அதன் தொடர்ச்சியாக, தற்போது, டெல்லி லட்சுமிபாய் கல்லூரியின் முதல்வராக உள்ள பிரத்யுஷ் வத்சலா, கல்லூரி வகுப்பறையின் சுவர் முழுவதும் சாணத்தைப் பூசச் செய்துள்ளார். கோடைகாலம் தொடங்கி உள்ள நிலையில், வகுப்பறைகளைக் குளிர்விப்பதற்காகப் பாரம்பரிய முறைப்படி இவ்வாறு செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

'இது முட்டாள்தனமான செயல்' என்று சமூக ஊடகங்களில் கண்டனம் வலுத்தது. இந்நிலையில், முதல்வர் பிரத்யுஷ் வத்சலாவின் அலுவலக அறைக்குச் சென்ற டெல்லி பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினர், அந்த அறையின் சுவற்றில் மாட்டுச் சாணத்தைப் பூசி, அந்தக் காணொலியை சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளனர். அதில், "கல்லூரி முதல்வர் பிரத்யுஷ் வத்சலா செயல் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. மாட்டுச் சாணத்தைப் பூசியதால் அவரின் அறை குளுகுளுவென இருக்கும். அதனால், கல்லூரி முதல்வர் அறையில் உள்ள ஏ.சி. இயந்திரங்கள் இனி தேவைப்படாது. எனவே அதை அகற்றி விடுவாரா?" எனக் கேள்வி எழுப்பி இருக்கின்றனர்.

பிற்போக்கு வாதிகளுக்குப் புரியும் வகையில், மாணவர்கள் எடுத்த பாடம் இணையத்தில் பரவி வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



அசோக்குமார்



### தலைவர் அணிவித்த பொன்னாடை!

1987-ஆம் ஆண்டு சென்னை, அண்ணா நகர் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது அவரது கரங்களால் எனக்குப் பொன்னாடை போர்த்தி, பாராட்டியபோது எடுக்கப்பட்ட புகைப்படம். அந்தத் தருணத்தை நான் பொக்கிஷமாகக் கருதிப் பாதுகாத்து வருகிறேன்.

**– அசோக்குமார்,**
**வட்டக் கழக முன்னாள் துணைச் செயலாளர்,**
**அண்ணா நகர் தெற்குப் பகுதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நான்கு விதமான உரையாடல்!

1954-ஆம் ஆண்டு, கலைஞர் திரைக்கதை உரையாடல்கள் எழுதி, வெளியான 'மனோகரா' திரைப்படம் மகத்தான வெற்றியடைந்தது. ஒரே காட்சிக்கு நான்கு விதமாக உரையாடல்களை எழுதிக் காட்டும் வல்லமை கொண்டவராக கலைஞர் புகழ்பெற்றார். திரைத்துறை வாய்ப்புகளை அரசியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்தியதில், அண்ணாவுக்கு அடுத்து புகழ்பெற்றவராக கலைஞர் திகழ்ந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131